We get a very interesting description of the 22 Srutis in the 'Sangīta Pārijāta' of Ahobala, a musicologist from Āndhra. He gives the *svara* names in accordance with their Suddha and Vikriti forms in a clear manner. He has eight flat *svaras* on their respective Srutis and 14 sharp *svaras* and one *svara* as 'Atitīvratama' on their respective Srutis.

The concept of 22 Srutis plays an important part even on the practical side of South Indian music because the nuances of many Karnatic ragas cannot be rendered without use of some subtle Srutis. This is why certain ragas of Karnatic music cannot be played on a tempered instrument like the harmonium.

Much water has flown under the bridge since such *lakshana* works were written in Sanskrit. Indian musicology has come a long way from the days of Bharata and Sārngadēva. The sruti problem is a topic in Indian Music theory that will be addressed from time to time by various scholars. It will probably never be laid to rest, because of the difficulties of understanding ancient theory in terms of present-day performance practice.

Modern thinking and technology have much to offer and guide musicology into productive and creative lines. Musicology need not necessarily be a study of the past, taking things for granted. Sir C. V. Raman opened up new paths in the physical dimensions of musicology and a host of scholars followed opening up new vistas of experiment. Many such scholars are happily in our midst today and it would be invidious to mention only some of them.

From the year 1970, the Sangeet Nātak Akādemi, New Delhi, has been convening seminars on science and music and publishing reports of such symposia. Musicians, scientists and historains sat around a common table and exchanged the results of their research and experiments.

In 1979, a seminar on musicolgy was sponsored jointly by the Sangeet Nātak Akādemi and the University of Madras with the main object of presenting mathematical and computer analysis of raga structure, scales, Srutis and mūrchanas and this threw up quite a

few ideas on the problem of Srutis. The fact that a large number of contemporary musicologists were still working at a re-orientation and break-through of the Sruti problem came as a pleasant surprise.

Western musical concepts of acoustics, pitch, intervals, overtones, tone, tone colour etc., are freely available to us now for a comparative study of the two systems.

Finally a word to those who plead for an increase in the number of Srutis in Indian music.

(1) Srutis must not be complicated. They must be easy to sing and play correctly without the assistance of any instrument specially designed for laborarory purposes.

(2) They must not be such as could only be obtained by measurement and calculation. Even average persons and children must be able to illustrate them in practice.

(3) They must be suitable for fretted instruments like our common Sarasvati *vina* and should be easy to manipulate correctly in the full speed of *Ālāpa*.

(4) When Srutis are prolonged to a length of time, they must create a harmonious effect on the ear.

(5) Srutis must be capable of being employed in gamakas which are the life-breath of Indian music.

(6) A study of Srutis divorced from their aesthetic aspect can only be an academic exercise, theoretical rather than practical.

# The Desi Suladi of Annamacharya

S. R. JANAKIRAMAN

The type of composition which exhibits Purandaradāsa's extraordinary mastery of the techinique of music is the *Sūlādi*. As to the exact meaning of the word 'Sūlādi' authorities differ. But one interpretation, not ordinarily familiar to students of music, treats the word as a corruption of 'Sulu Hādi' meaning, 'easy path' which is as relevant to the attainment of bliss as proficiency in music. In a Sūladi the theme is the same as in a Kīrtana, but it has usually seven or eight distinct divisions with elaborate *sāhitya*, each of which is set to one of the classical *tālas*. Some Sulādis have different *rāgas* for the different divisions, and in some others the *rāga* is the same for all the divisions. The Sulādi is a learned, elaborate and difficult piece giving a most comprehensive view of all the important *rāga sanchāras*. The 'Sangīta Sārāmrita' of Tulajēndra cites numerous *prayōgas* from Sulādis of Purandaradāsa as classic authority for the Lakshana of *rāgas* described in the work. It is regrettable that the tradition of rendering Sulādis is fast disappearing. A revival of interest in them would be of no small value for the future of the science and art of Karnatic music.

Sulādi, from the word Sudā, is a Dēsya word for Gīta. Venkatamakhi makes this clear. In the Gītaprakarana of his 'Chaturdandi Prakāsikā' he says that though all the musical compositions under the Sun can be designated as Gīta as per the aphorism 'Gīyate Iti Gītah', only that particular composition known as Sudā is eligible to be known as Gīta. The Sudā is again of two kinds. Suddha Sudā and Chāyālaga or Sālaga Sudā. The latter is described in detail. Sālaga Sudā has its varieties. Dhruva, Matta, Prati Matta, Nissāruka, Attatāla, Rasa and Ekatāli. While describing, for example, the first one is Dhruva, Venkatamakhi says that Udgrāha is of the three sections, the first and second parts have the same Dhātu, and Mātu alone differs. The third part, he says, is composed of *Swaras* in the higher region. Then follows the Ābhogakhanda. If the Nyāsa is fixed in the Ābhoga Khanda it becomes Dhruva. Some sixteen varieties of this Dhruva have again been described. For example if it is set in Adi Tāla and with Sāhitya in Vīrarasa,

it is Jayanta. In the same fashion the other varieties are also described.

So it is rather incorrect to say that Sulādis are like Gītas in musical structure and arrangement. Sulādis are no doubt *tālamālikas*, the sections being in different *tālas*. They may be considered as the counterparts of Tālaarnavam and panchatālēswaram. The *sāhitya* of the sulādis is characterised by fewness of syllables and consequent profusion of vowel extensions. Sulādis are more elaborate structures than gitas, the former having a wider range of compass.

Gītas are found in uniform tempo throughout, the medium tempo being so characteristic of it. But some sections of Sulādis are taken in different tempos. This will be evidenced by a few observations made by me on some of the Suladis of Purandaradasa given later as available in notation in the " Sangīta Sampradaya Pradarsini ". Here it may be pointed out that there is an authoritative sanction for the singing of certain sections of Sulādi in different tempos. Sarngadēva, in his ' Sangīta Ratnakara ' describes the four Geetis (viz) Magadhi, Ardha Magadhi, Sambhavita and Prathula. The process of singing with *padas* and laya adorned with *varnas* and Alankaras etc. is Gīti. After singing the first *pada* with slow *laya* (tempo) in the first *kāla*, then along with the other *padas* in the medium tempo in the second *kāla* and then along with the third *pada* in the fast tempo in the third *kāla*, thus where three *padas* are sung in three tempos they speak of it as Māgadhi.

The word Suladi as such and as noticed above is traceable in Kannada musical literature. This composition is more favoured by the Karnataka composers. Sripadaraya, Vyasaraya, Vijayadasa, Gopaladasa, Jagannathadasa, Naraharitīrtha, Vadiraja and Kanakadasa besides the illustrious Purandaradasa, have composed Sulādis. Though the Sahitya of the Sulādis is devotional in general, Madhura Bhakti, embodying the theme of Jīvatma-Paramatma union has also been adopted.

The Sulādis of Purandaradāsa are only *tālamālikās*, the *rāga* being the constant factor.

The Sulādi in Rāmakriya is given on page no. 1116 in the " Sangīta Samprādaya Pradarsini ", Volume 2. The first section is

set to Jhampa *tāla* and it runs for 32 Āvartas, including the repetition of the first four āvartas—'Achyutānanda Nārāyana', the end of the sixteenth and twenty-fourth āvartas.

The Second section is in Mathya *tāla* and it runs for 16 Āvartas. Here again a line of four Āvartas is repeated twice. The thrid section is Dhruva *tāla* for 16 Āvartas with a repetition of six Avartas.

The fourth section is set to Ata *tāla* consisting of 16 Avartas with repetition of a line of two āvartas.

The last section is Eka *tāla* running elaborately for 34 Avartas which is a queer case. There is no repetition of the singing of the previous Avartas in this section.

Introduction of 'Vāggēyakāra Mudrā' and reference to 'Tiruvēngalappa', repetition of the particular portion in each section except in Eka *tala* are evident. Only five of the Sulādi sapta *tālas* are employed, rupaka and triputa having been omitted. This Rāmakriya Sulādi is set in 'Atichitratama Mārga', each kriyā of the *tāla* carrying one Hrsvaswara in the Dhātu.

In the Devagāndhāri Sulādi of Srī Purandaradāsa, as found on page no. 577 of the 'Sangīta Sampradāya Pradarsini', Vāggeyakāra Mudrā is found in every section. Talas employed are as follows: 1. Āditala 2. Khanda Jāti Ragana Mathya—it is only literally khanda Jāti Mathya of the 35 *tālas*, Mathyatāla representing ragana. 3. Dhruvatāla in the second degree of speed. (Madhyamakāla) 4. Aditāla—repeated in the original structure. 5. Rupaka—in the same tempo as that of Dhruva. 6. Aditāla—original structure. 7. Ekatāla—same tempo as in Dhruva and Rupaka. 8. Atatala. The composition has been set in the general structure of Chitratama Mārga. In addition to the Mathya, Dhruva, Rupaka, Eka, and Ata *tālas* of the Sulādi Saptatāla group, Āditāla has been employed and that too thrice during the course of the composition.

Bhupāla Sulādi of Purandaradāsa as found on page 115 of the 'Sangīta Sampradāya Pradarsini' 1. Rupaka (Vilamba kāla)

2. Tisra Jāti Ragana Mathya tāla—Madhyama kala 3. Dhruva tala—Druta kala 4. Triputa—Madhyama kala. 5. Eka tala—Druta kala.

## DESI SULADI OF ANNAMACHARYA:

In as much as the word Sulādi itself is Desya for Gīta it is most appropriate that Annamāchārya has designated the composition as 'Dēsi Sulādi' as deciphered from the copper plates. Annamāchārya, the Āndhra Kavitāpitāmaha and Drāvida gāna Sārvabhauma, is perhaps the one composer who has composed a Sulādi in Telugu and it looks almost like the only composition of the kind. Annamāchārya's Sulādi is a fullblown *rāga, tāla, mālikā.* The *rāgas* are Mālavigaula, Rāmakriya, Varāli, Bauli, Pādi, Nāta and Srīrāga. The composition most aptly starts with the 'best of all ragas' Mālavigaula, in the words of Rāmāmātya, and concludes with the most auspicious *rāga*, Srīrāga, eminently suited for *mangalam.* It is here in the last *rāga* the union of Srī Venkatēswara and Alamēlu Mangā, the celestial Nāyaka and Nāyaki, is hinted at.

The colophon of the composer or its synonyms are incorporated in each section. That was evidently the practice. The *sāhitya* consists of sweet and soft sounding words befitting the holy theme of Divine Love. Fewness of words and the consequent profusion of vowel extension mark the feature. The sahitya of the last section of the song is concluded with the utterance of the name of the Lord of the Seven Hills, the Ishta Dēvatā of the composer. Analagous to the repetition of the portions of the *Sāhitya* within each section in the sulādis of Purandaradāsa, Annamāchārya also has made provision for such a scope. The original music of the composition has been lost. A humble attempt has been made by me to give a suitable musical setting to the song bearing well in mind not only the supreme quality of the *rāgas* following one after another very slightly varying in *swaras* but much in intrinsic *bhāva* but also the spirit of the contents of the theme of the song.

The particularly noteworthy feature of this composition is the introduction of 'Vākya' rather an unusual feature in a Sulādi. This Vakya is talked about only with reference to Prabandha. Venkatamakhi says that there is also a tradition in singing the

prabandha in such a way that the Ābhoga khanda is split into two parts, the former part being the Ālāpa khanda without confining to rhythm. This Alapākhanda incorporates the name of the prabandha and also the colophon of the composer. Though the latter aspect is found in the Vākya portion of Annamāchārya's Sulādi, the former is not found.

The Dēsī Sulādi of Annamāchārya, reproduced below is in fact a Sapta-rāga-tāla-mālika song and a unique one of its kind.

---

## देशी सूळादि

१. माळविगौळ — ध्रुव ताल:

वले वले ननि वलचिति नट तन
वललकु लोगानटरे इक ।
पलमो चलमो नाकुनु
पतितो जगडमुला ॥
नेलतलु तन केंदरु गलिगिन
नेने सतमनि तेलियरे ।
पोलमेल्ला दिरिगिन तेटिकि
पूबोदये नेलवु गदे ॥

### पल्लवि

अनगदरे ओ चेलुलाल !
आतनि तोडुत नीमाटले ।
विनयंबुन ने नडवग श्री
वेंकटपतिकिदि दगवा ॥

### वाक्यम्

अल्लनाडोकते तोड
नट्टे माटलाडगानु ।
चल्लगा नेने चूचि
जंकिंचितिना ॥

पल्लद माडिति नटे
पैडिवण्टि माटनैन ।
चिल्लरले मानडाये
श्री वेंकटेश्वरुडु ॥

२. रामक्रिया — मठ्य ताल:
तानाडिन माटलेल्ला दलचुमनि ।
कोनेटि रायनिकि नागुब्बल मीदटनु आनवेट्टरे ॥

३. वराळि — रूपक ताल:
वेग्गळमुग सारेकु वेंगेमुलाडगजालनु ।
शिग्गरि तनमुन गोसरेद शेषाचलपतिनि ॥

४. बौळि — झंपे
अलिगि साधिंचदग दंजनाद्रीश्वरुनि ।
गलिकि चूपुलने मदिगरग जेसेदनु ॥

५. पाडि — त्रिपुट
चनवु गलिगिन सरस ममरुनु
समुकमुनने मनसु देलिसेद ।
मुनुपनडुगरे मदनजनकुनि
मुद्दुडुंगरमु ॥

६. नाट — अट ताल:
मायिंटिकि दाने रागा
मंकुल्ल बोंकुलु देरे ।
वेयिनेल ने मोक्केने
वेंकटारायनिकि ॥

७. श्री रागः — एकतालि
अलरिन रतुल दोय्यलु लाल नन्नु ।
गलसे वेडुक श्रीवेंकटविभुडु ॥

---

# Desi Suladi

(A FREE RENDERING OF THE ORIGINAL COMPOSITION)

The love-lorn *Nāyikā* in her anguish outpours her varied feelings to the Sakhis thus:

1. When I myself crave for His love
   do not I get into his traps?
   Neither I reap any fruits nor I have
   any malice. Why quarrels with my beloved!
   He may be having many mates
   but, know, I am the everlasting.
   For the bee that wanders about
   all over the field, flower-bush is the only abode.

(PALLAVI)

O Friends ! Please convey to Him these very feelings.
When I am so modest in my behaviour, is this
just on Venkatapati's part (to be so unkind)?

(VAKYAM)

Gently I have seen Him the other day
While conversing fondly with a maiden
did I threaten Him then?
Did I babble even a precious word?
Yet *Lord Venkateswara* does not stop His naughty tricks.

2. You swear by my breasts and tell
   *Kōnētirāya* to recollect all His utterances

(Interlude: The *Nāyika* in a mood of reconciliation
(contemplates thus:)

3. I cannot indulge in any more in excessive sarcasms.
   With bashfulness I hanker after *Sēshāchalapati*.

4. It is not proper to win over *Anjanādrisvara*
by fretting and fuming,
I shall melt his heart with my charming glances alone.

5. If there is acquaintance amusement emerges.
I will read His mind in person.
Will you please ask for *Madanajanaka's* pretty ring first?

6. When He Himself dropped into my house, all the
obstinacies and lies vanished
Why all this? I bow unto *Vēnkatarāya.*

7. O maidens? *Vēnkatavibhu* made love with me
delightfully with blossoming desires.

(The Epilogue comes when the Nāyikā and Nāyaka reunite)

# ஆகம நூல்களும் - சங்கீதமும்

T. G. அனந்தசுப்ரமணியம்

சங்கீதம் என்பது கலையா? சாஸ்திரமா? வேதமா? என்ற கேள்வி எழுகிறது. ஆனால் சங்கீதத்தைப் பற்றிச் சங்கீத இலக்கண நூல்கள் பலவாருகக் கூறுகின்றன. சங்கீதத்தைக் கலையாக நினைத்துப் பொழுது போக்குகிறோம். சாஸ்திரமாக நினைத்து விவாதிக்கிறோம். வேதமாக நினைத்து பகவானுக்கு அர்ப்பணிக்கிறோம். ஆகையால் சங்கீதம் என்பதை யார் யார் எவ்விதம் கருதிக் கையாளுகிறார்களோ அவர்களுக்கு அவ்வவ்வாருக உபயோகப் படுகிறது. எந்த விதமாக நினைத்தாலும் அது பகவானுக்கு அர்ப்பணமாகிறது. ஆனால் சங்கீதத்தை வேதமாகப் போற்றியும், அதை உபாஸித்தும் மோக்ஷ மடைந்தவர்கள் பல மகான்கள். நாட்டிய சாஸ்திரத்தின் முதல் அத்யாயத்தில் "சங்கீதமென்பது வேதத்திற்குச் சமம்" என்று கூறப்பட்டுள்ளது.

सर्वशास्त्रार्थसम्पन्नं सर्वशिल्पप्रवर्तकम् ।
नाट्याख्यं पञ्चमं वेदं सेतिहासं करोम्यहम् ॥ १५ ॥
एवं संकल्प्य भगवान् सर्ववेदाननुस्मरन् ।
नाट्यवेदं ततश्चक्रे चतुर्वेदाङ्गसम्भवम् ॥ १६ ॥
जग्राह पाठ्यमृग्वेदात्सामभ्यो गीतमेव च ।
यजुर्वेदादभिनयान् रसानथर्वणादपि ॥ १७ ॥

இங்கு சங்கீதத்திற்கு இலக்கணம் கூறவேண்டியிருக்க நாட்டியத்தைப் பற்றியல்லவா கூறப்பட்டுள்ளது என்ற கேள்வி எழலாம். அதற்குச் சமாதானம் "ஸங்க்ரஹ சூடாமணி" கூறுகிறது.

नृत्यं गीतं च वाद्यं च दृश्यं श्राव्यं मनोहरम् ।
संगीतं प्रोच्यते तज्ज्ञैः संगीतं सामवेदजम् ॥ (२-१)

சங்கீதம் என்பது நாட்டியம், கீதம், வாத்யம், த்ருச்யம் (நாடகம்), ச்ராவ்யம் (காதுகளால் கேட்கப்படுவது) முதலியவைகளை ஒருங்கு சேரக் கொண்டதேயாகும். ஆகையால் சங்கீதத்திற்கு என்னென்ன இலக்கணங்கள் கூறப்படுகின்றனவோ அவையெல்லாம் மேற்கூறியவைகளுக்கும் பொருந்தும். மேலும் கொஞ்சம் விளக்கமாகவே கூறுகிறது "ஸங்க்ரஹ சூடாமணி":

सामवेदस्तु सङ्गीतप्राधान्याद्देववल्लभः ।
तत्र वेदे तु संगीतं वाद्यमृग्वेद उच्यते ॥ १८ ॥
नृत्यं यजुषि शृङ्गाररस आथर्वणोद्भवः ।
एवं चतुर्विधं गीतवाद्यनृत्यरसात्मकः ॥ १९ ॥

ஆகையால் எல்லாம் சேர்ந்ததே சங்கீதமாகும். நிற்க, எவ்விதம் இதர சாஸ்திரங்கள் தர்மார்த்த காம மோக்ஷங்களுக்கு உபகாரகமாக இருக்கின்றனவோ, அதேபோல் இந்த சங்கீத சாஸ்திரமும் சதுர்வித புருஷார்த்தங்களுக்கு ஆதார மாகிறது. இவ்விவரத்தை ''அபிநய தர்ப்பணம்'' என்ற நூல் கூறுகிறது:

पाठ्यं चाभिनयं गीतं रसान् संगृह्य पद्मजः ।
व्यरीरचच्छास्त्रमिदं धर्मकामार्थमोक्षदम् ॥

பகவானுக்கு வேதங்களைப் பாராயணம் செய்வதால் எவ்வித மகிழ்ச்சியுண்டாகிறதோ, அதே போல் சங்கீதமும் பகவானுக்குப் பிரீதியை உண்டாக்குகிறது. இவ்விஷயத்தை ''ஸ்வரமேள கலாநிதி'' விளக்குகிறது:

गीतेन प्रीयते देवः सर्वज्ञः पार्वतीपतिः ।
गोपीपतिरनन्तोऽपि वंशध्वनिवशंगतः ॥
सामगीतिरतो ब्रह्मा वीणासक्ता सरस्वती ।

ஆகையால் சங்கீதம் என்பது வேதத்திற்குச் சமம். கானம் என்று சொன்னால் பாட்டு என்றுதான் பொருள் கூறலாம். மேலே கூறப்பட்ட சான்றுகளால் சங்கீதம் என்று சொன்னால் நிருத்தம், கீதம், வாத்தியம், முதலியவற்றுடன் கூடியவைக்குத்தான் பெயராகும். இவ்விவரத்தை ''ராகதத்வ விபோதம்'' என்ற நூல் குறிப்பிடுகிறது:

नृत्तवाद्यविशेषाभ्यां गानं चेदुपबृंहितम् ।
तदा संगीतमित्याहुः लक्ष्यलक्षणकोविदः ॥ ३ ॥
गीतवादित्रनृत्यानां यस्मादङ्ग्यङ्गता भवेत् ।
गानं केवलमित्याहुः संगीतं लक्ष्मवेदिनः ॥ ४ ॥

ஆகையால் சங்கீதம் என்பது வேதத்திற்கு ஒப்பானதாகும் என்பதை மேற்கூறிய சான்றுகளால் அறியலாம்.

ஆகமங்களைப் பற்றி

ஹிந்து மதத்தில் விக்கிரக வழிபாட்டுமுறை என்பது தொன்று தொட்டு வந்துள்ளது. இந்த வழிபாட்டு முறையைப் பற்றிக்கூறுவதே ஆகமம் என்பது. இது சைவ—வைணவ முறையில் இரண்டாகக் காணப் படுகிறது. ஆயினும் இரண்டும் விக்கிரக வழிபாட்டு முறையைத் தான் கூறுகின்றன. இரண்டிலும் அநேக ஆகமங்கள் இருக்கின்றன. ஆகமம் என்பது வழி வழியாக வந்த வழிபாட்டு முறை. இதைப் பற்றி ''ரௌரவாகம'' வித்யாபாத மூன்றும் படலத்தில்.

न मीमांसया विचार्या वा मन्त्राः स्वल्पधिया नरैः ।

प्रमाणमागमं कृत्वा श्रद्धातव्यं हितैषिभिः ॥

என்று கூறப்பட்டுள்ளது. இதே போல் ''ஸூதஸம்ஹிதை'' முக்தி கண்டத்தில்

पाञ्चरात्रादितन्त्राणां वेदमूलत्वमास्तिके ।

न हि स्वतन्त्रास्ते तेन भ्रान्तिमूलानिरूपणे ॥

என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் ஆகமம் என்பது பழமையான விக்ரக ஆராதனை முறையைக் கூறுவது. அந்த ஆகமங்கள் இறைவனை வழிபடும் முறையைக் கூறும் பொழுது பற்பலவிதமான முறைகளையும் கூறியுள்ளன. இறைவனுக்கு உத்ஸவாதிகள், பூஜைகள், கும்பாபிஷேகங்கள் முதலியவை செய்யும் முறைகளைக் கூறும் பொழுது. அவ்வப் பொழுது, அந்தந்த இடங்களில் சங்கீதத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும், ஆலயங்கள் நிர்மாணம் செய்யும் பொழுது பற்பல மண்டபங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. அவற்றுடன் சங்கீதம், நாட்டியம் முதலிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் மண்டபங்கள் நிர்மாணிக்கவேண்டிய முறைகளையும் ''ஸ்ரீப்ரச்ன ஸம்ஹிதை'' என்ற பாஞ்சராத்ர ஆகமம் கூறுகிறது.

अग्रेऽर्धमण्डपात् कुर्यात् नृत्तमण्डपनामकम् ।

नृत्तार्धमण्डपस्याग्रे कुर्यादास्थानमण्डपम् ॥ (श्री. प्र. १०-३)

அர்த்த மண்டபத்திற்கு முன் நிருத்தமண்டபம் அமைக்க வேண்டும். அந்த நிருத்த மண்டபத்தின் பாதியில் ஆஸ்தான மண்டபம் கட்டவேண்டு மென்று கூறுகிறது. இம்மாதிரி ஆகம நூல்களில் வழிபாட்டு முறைகளில் சங்கீதம், நாட்டியம் போன்ற நுண்கலைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கீதம்,

நாட்டியம் முதலியவைகளெல்லாம் எதற்காக ஏற்பட்டன என்பதை "நாட்டிய சாஸ்த்ர ஸங்க்ரஹம்" என்ற நூல் கூறுகிறது:

नृत्तं त्वत्र नरेन्द्राणां अभिषेके महोत्सवे ।
यात्रायां देवयात्रायां विवाहे प्रियसंगमे ॥
नगराणमगाराणां प्रवेशे पुत्रजन्मनि ।
ब्रह्मणोक्तं प्रयोक्तव्यं माङ्गल्यं सर्वकर्मसु ॥

அதாவது அரசர்களின் பட்டாபிஷேக காலத்திலும், பகவானுடைய உத்ஸவகாலங்களிலும், இதர விசேஷகாலங்களிலும் நாட்டியம், சங்கீதம் முதலியவைகளைச் செய்தல் மங்களகரமாகும் என்று கூறுகிறது. தேச நலனுக்கும் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடத்த வேண்டுமென்று "ஸுப்ரபேதாகமம்" என்ற நூல் கூறுகிறது.

एवं नृत्तं कृतं यत्र सुभिक्षं लोकशान्तिकम् ।
दुर्निमित्तानि नश्यन्ति क्षेत्रमारोधकं नृणाम ॥

நாட்டில் நடமாடும் பஞ்சம், பட்டினி, அசாந்தி, கலகம் முதலியவை விலகி நாடு நல்ல நிலைமையை அடையும் என்று விளக்கிக் கூறப்பட்டுள்ளது. நிருத்தம் என்று சொன்னால் பாட்டோடு சேர்ந்தது என்பதை "ஸுப்ர பேதாகமம்" சிவோத்ஸவ விதியில் வலியுறுத்துகிறது.

देवस्याग्रे विशेषेण नृत्तं कुर्यात्सगेयकम् ।

என்று இங்கே "ஸகேயகம் நிருத்தம்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். ஆகையால் கோயில்கள் கட்டும்பொழுது கலைகளுக்காக ஓர் மண்டபம் கட்டவேண்டுமென்பதையும், கோயில்களின் வழிபாட்டு முறைகளில் சங்கீதம், நாட்டியம் முதலியவை இடம் பெறவேண்டுமென்பதையும் இதுவரை அறிந்தோம்.

## ஆகமநூல்களும் - சங்கீதமும்

கோயில்களில் உத்ஸவாதிகள் செய்யும் பொழுது திக்பந்தனம் செய்வார்கள். அதாவது அந்தந்த திக்தேவதைகளை அந்தந்த திக்குகளில் அழைத்து, பூஜை செய்து, பலிபோடும் போது அந்தந்த தேவதைகளுக்குப் பிரியமான ராக, தாள, ந்ருத்தம் முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன. கோயில்களில் துவஜாரோஹண தினத்தில் திக்தேவதைகளுக்கு வீதிகளில் அந்தந்த திக்கோணங்

களில் பலி போடுவது என்பது ஓர் முறை. இதைப் பற்றி ''ஸ்ரீப்ரச்னஸம்ஹிதை'' கூறுகிறது.

आह्वानं देवपुरतः वीथीषु च बलिं क्षिपेत् ।
आह्वानं बलिदानं च वीथ्यामेव च कल्पयेत् ॥ ३४-७०, ७१.

இந்த இடத்தில் தான் ''நவஸந்தி கவுத்வம்'' என்று கூறப் படும் ஓர் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது அதாவது பிரம்மா முதலான ஒன்பது திக்தேவதைகளைத் துதித்து அவரவர்களுக்கு இஷ்ட மான ராக, தாள, வாத்ய, நிருத்தங்களைச் செய்தும், பாடியும் பலி போடுவதாகும். தற்காலத்தில் இம்முறை நடந்து வருகிறதா? இல்லையா? என்று தெரியவில்லை. இதற்கு ஆதாரம் ஆகமங்களில் காணப்படுகின்றன. மேலும் ''பரதார்ணவம்'' என்ற நூலில் இதைப்பற்றி கூறியுள்ளது, ''கவுத்வம்'' ''கௌதம்'' என் பதற்கு இலக்கணம்.

यत्किञ्चित्तालसंबन्धं देवताविषयात्मकम् ।
विचित्रपाटसंयुक्तं शब्दार्थरूपशोभितम् ॥
. . . . . . किन्तान्तं कौतमुच्यते ।
ककारः श्वेतवर्णं स्यादौकारो रक्तवर्णकम् ॥
तकारः श्यामवर्णं स्यादित्येतद्वर्णलक्षणम् ।
ककारे कञ्जभूभार्या उकारे विष्णुवल्लभा ।
तकारे पार्वती प्रोक्ता कौतवर्णाधिदेवता ॥ (४९५)

விசேஷ தாளங்களில் சொற்கட்டுக்களையும், வார்த்தைகளையும் கலந்து தெய்வங்களைப் புகழ்ந்து அமைக்கப்படும் ஸாஹித்யங் களுக்குக் ''கௌதம்'' ''கவுத்தம்'' என்று பெயர்.

''க'' என்பது வெண்மை நிறத்தையும், ''ஔ'' என்பது சிவப்பு நிறத்தையும், ''த'' என்பது கருப்பு நிறத்தையும் குறிக்கும்.

''க'' ஸரஸ்வதியையும் ''ஔ'' மகாலக்ஷ்மியையும், ''த'' பார்வதீ தேவியையும் குறிக்கும்

இப்பொழுது நாம் கும்பாபிஷேக காலங்களில் சங்கீதக்கச்சேரி நாகஸ்வரம், ஹரிகதைகள், ஸதுபந்யாஸங்கள் முதலியவற்றை நடத்துகிறோம். சிலர் நினைக்கலாம்: கோவிலுக்குக் கும்பாபிஷேகம் நடக்கும் பொழுது இவையெல்லாம் தேவைதானா? வீண் செலவு தானே என்று. ஆனால் இதற்குக் காரணம் ஆகமங்களில் சொல்லப் பட்டிருக்கின்றது. அதாவது ஆசாரியனுக்குக் கும்பாபிஷேக காலத்

தில் சில நியமங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் அவன் இரவில் உறங்கக்கூடாது என்பது ஒன்று. அவன் உறக்கமில்லாமல் விழித்திருப்பதற்கு இம்மாதிரி நிகழ்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளார்கள். இவைகளைப் பற்றி ''ஸோமசம்பு பத்ததி'' என்ற ஆகமத்தில் பவித்ராரோஹணவிதியில் கூறப்பட்டுள்ளது.

आचान्तो मन्त्रसन्नद्धः कृतसंगीतजागरः । (श्लोकः-८५)

என்று. இதே அபிப்ராயத்தை ''பூர்வ காரணாகமத்தில்''.

नृत्तगेयैश्च वाद्यैश्च स्तोत्रैर्मन्त्रजपैस्तथा ।
रात्रिशेषं व्यपोह्याथ प्रभाते विमले गुरुः ॥

என்று. இந்த அபிப்ராயத்தையே ஸுப்ரபேதாகமம், மோஹ சூரோத்தரம் முதலிய ஆகமங்களில் காணலாம்.

## தேவதைகளும் - சங்கீதமும்

ஸ்ரீ ப்ரச்ன ஸம்ஹிதையில் 33-வது அத்யாயத்தில் கருடனை வழிபடும் பொழுது :—

ताक्ष्यस्य तालं त्रिपुटं स्वरो मध्यम ईरितः ।
गौडाख्यरागो नृत्तं च विष्णुक्रान्तमुदाहृतम् ॥ (३३-७१)

கருடனைத் துதித்து வழிபடும் பொழுது இம்மாதிரியாக வழிபட வேண்டும் என்று கூறுகிறது. கருடபகவானுக்குத் திரிபுட தாளம், மத்யம ஸ்வரம், கௌடராகம், விஷ்ணுக்ராந்தம் என்ற நிருத்தம், முதலியவையோடு துதிக்க வேண்டும். ஆகமங்களில் கூறப்படும் சங்கீத சம்பந்தமான விஷயங்கள் சங்கீத நூல்களில் காணப்படுகின்றனவா? அல்லது பொருத்தப்படுகின்றனவா? இல்லையா என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். ஆனால் சங்கீத இலக்கண நூல்கள் எல்லாம் வடமொழியில் தான் அதிகமாகக் காணப்படுகின்றன. அந்த நூல்களில் கூறப்பட்டுள்ள இலக்கண முறைப்படி தற்காலத்தில் நடந்து வருகிறதா என்றால் சந்தேகம் தான். சங்கீத நூல்கள் ஒன்றுக் கொன்று சிறிது மாறுபட்டே காணப்படுகின்றன. எனினும் இவற்றை யெல்லாம் ஓரளவு ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது இக்கட்டுரை.

''திரிபுட'' என்ற தாளம் பொதுவாகக் கூறப்படுகிறது. இத் தாளம் ஜாதிபேதத்தால் பலவாறாகக் கூறப்படுகிறது. உ. க. திச்ரஜாதி-திரிபுட, சதுச்ரஜாதி-திரிபுட என்று. இந்தத் தாளம் மிகவும் வழக்கில் உள்ளது.

அடுத்து "கௌட" என்ற ராகத்தைப் பார்ப்போம். இந்த ராகத்தை "சுத்த கௌட" ராகமென்று "ராகரத்னகரம்" என்ற நூல் கூறுகிறது. இதற்கு இலக்கணம் கூறும் பொழுது "ஸ்ரீ ராக" மென்ற ஆண்ராகத்திற்கும், "கௌடீ" என்ற ராகிணீ [பெண்]க்கும் பிறந்தது என்று கூறுகிறது. இது ஓர் ஆண் ராகம்.

सर्वालङ्कारसंयुक्तः गौरो शुक्लाम्बरः प्रियः ।
सर्पवाहो शङ्खपाणिः स गौडश्शुद्धसंज्ञकः ॥

இந்த ச்லோகத்தின் கருத்தைப் பார்க்கும் பொழுது கருடனுக்கும் இந்த ராகத்திற்கும் ஓரளவு பொருத்தமிருக்கிறது என்பதை உணரலாம். எல்லாவிதமான அணிகளுடன் கூடியதும், வெண்மையானதும், வெண்மையான ஆடையில் பிரீதியுள்ளதும், ஸர்ப்பத்தை வாஹனமாகயுடைய்தும், சங்கம் என்பதை கையில் வைத்திருப்பதுமான ராகம் "கௌட" ராகம். என்று கூறப்பட்டுள்ளது. கருடனைப் பார்க்கும் பொழுது கழுத்தில் வெண்மை தெரியும். வெண்மையான வஸ்த்ரத்தை அணிந்திருப்பது. ஸர்ப்பங்களுக்குச் சத்துருவான படியால் ஸர்ப்பத்தையே வாஹனமாகயுடையது. சங்கம் என்பது மகாவிஷ்ணுவின் சின்னம். அதைக் கையில் உடையது. இம்மாதிரி ஒப்புநோக்கும் பொழுது கருடனுக்கும் இந்த ராகத்திற்கும் பொருத்தம் காணப்படலாம். "ராக விபோதம்" என்ற நூல் கௌட ராகத்திற்கு இலக்கணம் கூறுகிறது.

गौडन्यल्पो मध्याह्नार्हो धांशन्यासग्रहो गौडः ॥ (४-३६)

இந்த இலக்கணப்படி இந்த ராகம் தற்காலத்தில் வழக்கில் இல்லை எனத் தெரிகிறது.

அடுத்து கருடாழ்வாருக்குப் பிடித்த நிருத்தம் "விஷ்ணுக்ராந்தம்" என்பது. இந்த நிருத்தத்திற்கு "நாட்டிய சாஸ்த்ரம்" இலக்கணம் கூறுகிறது.

करौ च रेचितौ यत्र विष्णुक्रान्तं तदुच्यते ।
करमावर्तितं कृत्वा ह्यूरुपृष्ठे निकुञ्चयेत् ॥ (४-२६१)

என்று. இந்த அபிப்ராயத்தையே "நிருத்தரத்னவளி" என்ற நூலும் கொஞ்சம் விளக்கமாகக் கூறுகிறது.

यदाग्रे कुञ्चितः पादः प्रसृतो गगनोन्मुखः ।
रेचितौ स्तः करौ विष्णुक्रान्तं तद्विक्रमे हरेः ॥ (३-१६८)

என்று. "ப்ரஸ்ருத:" "प्रसृत:" என்ருல் முழங்கால் என்று பொருள். வளைந்த பாதமும் புறப்படத்தயாராகவுள்ள முழங்கால்களையுடையதும் "रेचितं" என்ருல் குதிரையினுடைய கதிவிசேஷம், அல்லது நிதானமாகச் செல்வது என்றும் பொருள் கூறலாம். கைகள் இரண்டும் மேல் நோக்கிச் செல்லக் கூடியதுமான நிலையில் உள்ளது. இது போன்ற அங்கவிந்யாஸங்களைச் செய்தால் "விஷ்ணுக்ராந்தம்" என்ற நிருத்தமாகும். இன்னும் கொஞ்சம் விளக்கமாக "பரதார்ணவம்" கூறுகிறது.

गगनोन्मुखमङ्घ्रिस्स्यात् दक्षिणोऽन्यो महीं गतः ।

हस्तौ तु रेचिताकारौ विष्णुक्रान्तं विदुर्बुधाः ॥ (८८१-பக்கம்)

கோயில் உத்ஸவாதிகளில் யாகசாலை நிர்மாணிக்கப்பட்டு அங்கே தேவதைகளையும், திக்தேவதைகளையும் ஆவாஹனம் செய்து பூஜைகள் நடத்துவார்கள். அப்பொழுது அங்கே எந்தெந்த திக்குகளில் எந்தெந்த தேவதைகளுக்குரிய வாத்யங்களை வைத்து, பூஜித்து அதற்குள்ள தேவதைகளை ஆவாஹனம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

शङ्खं कोणं च विन्यस्य तत्रादीन् परितो न्यसेत् ।
ऐन्द्रे वीणादि याम्ये तु सुषिरादीनि पश्चजे ॥
वारुण्यां चर्मवाद्यानि सौम्ये कांस्यं तु विन्यसेत् ।
संकर्षणं मड्डुके च शङ्खे विष्णुं च कोणके ।
नरोत्तमं चर्मजेषु कांस्यजेषु ह्यधोक्षजम् ॥

அதாவது சங்கம், கோணம் (கோணம் என்ருல் வாத்யத்தை அடிக்கும் கோல்) மற்றும் வீணை முதலான வாத்யங்களை, நான்கு பக்கங்களிலும் வைக்கவேண்டும். எந்தெந்த வாத்யத்தை எங்கெங்கு வைக்கவேண்டுமென்பதைக் கூறுகிறது. கிழக்கில் வீணையையும், தெற்கில் முகவாத்யத்தையும், மேற்கில் தோல் வாத்யங்களையும், வடக்கில் உலோக வாத்யங்களையும் வைத்து, "மட்டுகம்" என்ற வாத்யத்தில் "ஸங்கர்ஷண" என்ற தேவதையையும், சங்கு, கம்பு இவற்றில் விஷ்ணுவையும், முகவாத்யத்தில் அநிருத்தனையும் வீணை முதலான வாத்யங்களில் மதுத்விட் என்ற மூர்த்தியையும், தோல் வாத்யங்களில் "நரோத்தமனையும்" உலோக வாத்யங்களில் "அதோக்ஷஜன்" என்ற தேவதையையும் ஆவாஹனம் செய்து பூஜிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதே போல் சைவாகமமான தீப்தாகமத்தில் 91-வது படலத்தில் யாத்ரா உத்ஸவம் என்று ஓர் உத்ஸவமும், அந்த

உத்ஸவத்தில் பரிவேஷக்ரமம் என்று ஒன்றும் கூறப்பட்டுள்ளது. "பரிவேஷம்" என்றால் வட்டம் என்று பொருள்.

मृदङ्गादिमहाशब्दाः पूर्वायां दिशि संस्थिताः ।
नर्तको मर्दलश्चैव दक्षिणे तु व्यवस्थिताः ॥
गायकाः वंशकाश्चैव उत्तरे तु व्यवस्थिताः ।
उभयोः पार्श्वयोश्चैव रुद्रस्य गणिकाः स्थिताः ।
देवस्याग्रे विशेषेण नृत्य कुर्यात्सगेयकम् ॥

பகவான் வீதிவலம் வரும் பொழுது மிருதங்கம் முதலிய வாத்யங்கள் முன் செல்லவேண்டும். இடது பக்கத்தில் நர்த்தகர்களும், மத்தளமும், வலது பக்கத்தில் பாடகர்களும், குழல் வாசிப்பவர்களும், இரண்டு புறமும் ருத்ரகணிகைகளும் பகவானுக்கு முன் பாட்டோடு கூடிய நிருத்யமும், செல்லவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. [மிருதங்கம் என்பது வேறு, மத்தளம் என்பது வேறு. மத்தளம் என்பது நாட்டியத்திற்கு வாசிப்பதாகும்.] இதற்குப் பிறகு திக்தேவதைகளைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. முதலில் பிரம்மாவைப்பற்றிப் பார்ப்போம்.

## பிரம்மதேவன்

பிரம்மாவை துவஜஸ்தம்பத்தின் அடியில் ஆவாஹனம் செய்து பூஜிக்கவேண்டும். இவ்விவரத்தை "ஸ்ரீப்ரச்னஸம்ஹிதை" 34-வது அத்யாயம் விரிவாகக் கூறுகிறது :—

ध्वजस्तम्भेन्द्रककुभो ध्यात्वा ब्रह्माणमब्जजम् ।
लक्ष्मीशोत्सवसेवार्थं आयाहि कमलासन ॥
घण्टारागो निषादश्च स्वस्तालस्तु वै ध्रुवः ।
नृत्तं कमलमित्याहुः ब्रह्मणः प्रीतिकारकम् ॥ (३२२)

பிரம்ம தேவனுக்கு "கண்டா" ராகம் மிகவும் பிரியமானது என்று கூறப்பட்டுள்ளது. "கண்டா" என்ற ராகத்தை "கண்டாரவம்" என்ற பெயரில் தற்காலம் வழங்கிவருகிறார்கள். இந்த ராகம் நடபைரவி ஜன்யமாகும். வேங்கடமகி நாரீரீதிகௌளையின் ஜன்யமாகக் கூறுகிறார். "கருணாம்ருதஸாகர"த்தில் கண்டாரவ ராகம் 2-வது ரத்னாங்கி ஜன்யமாகவும், 20-வது நடபைரவி ஜன்யமாகவும் காணப்படுகிறது. "கண்டா" என்ற பெயரிலேயே ஸ்ரீ தியாகராஜஸ்வாமி, ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இருவரும் பாடியுள்ளார்கள்.

அடுத்தது ''துருவம்'' என்ற தாளம். இந்த தாளம் பிரஸித்த மானது. இந்த துருவதாளம் இரண்டு என்றும், ஒன்று '' நாட்ய தண்டீ துருவம் '' என்றும், மற்றொன்று '' வீணாவாத்ய துருவம் '' என்றும் ''சதுர்தண்டீப்ரகாசிகை ''யில் கூறப்பட்டுள்ளது :—

ध्रवताल: पुनर्द्वेधा नाट्यदण्डीध्रुवस्तथा ।
वीणावाद्यध्रुवश्चेति नाट्यदण्डीध्रुवे लघुः ॥
चतुरक्षरवानादौ गुरुः पश्चाद्दशाक्षरः ।
वीणावाद्यध्रुवे त्वादौ लघू द्वौ चतुरक्षरौ ॥
ततः षडक्षरोच्चारसंमितो लघुशेखरः ।
चतुर्दशाक्षरमितौ आहत्येतावुभौ ध्रुवौ ॥ (२९)

இரண்டிற்கும் அக்ஷரங்கள் 14-தான்.

அடுத்து நிருத்தம் ''கமலம்'' என்று கூறப்பட்டுள்ளது. சங்கீத நூல்களில் இந்தப் பெயரில் நிருத்தம் காணப்படவில்லை. ஆனால் '' பிரம்மஸந்தி கவுத்தத்திலும் '' '' கமலமது நிருத்தம் '' என்று கூறப்பட்டுள்ளது. பிரம்மாவிற்கு முத்திரையாக வலதுகை '' ஹம்ஸாஸ்ய '' மாகவும், இடதுகை '' சதுர '' மாகவும் கூறப் பட்டுள்ளது. ஹம்ஸாஸ்யத்திற்கு '' பரதார்ணவம் '' இலக்கணம் கூறுகிறது :—

मध्यमाद्यास्त्रयोऽङ्गुल्यः प्रसृता विरला यदि ।
तर्जन्याङ्गुष्ठसंश्लेषात् करोहंसास्यको भवेत् ॥ (२३)

நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் இவற்றை ஒன்றை யொன்று தொட்டுக்கொள்ளாதவாறு நீட்டி, கட்டைவிரலையும், ஆள்காட்டிவிரலையும் சேர்த்தால் '' ஹம்ஸாஸ்யம் '' என்பதாகும். இந்த முத்திரையைப் பற்றி '' நிருத்தரத்னவளி '', '' சங்கீத ரத்னகரம் '' முதலிய நூல்கள் கூறுகின்றன. '' சதுரம் '' என்ற முத்ரையைப் பற்றி '' ஹஸ்த முக்தாவளி '' என்ற நூல் குறிப் பிடுகிறது.

सप्तसागरवेलायां विरहे च विधातरि ।
यौवने प्रवणे गेहे मयोक्तः चतुरः करः ॥

(Music Academy Journal-1955. Vol. xxvi)

அதாவது '' பிரம்மா '' வைக் குறிக்க இந்த முத்ரையைப் பிடித்துத் தெரியப் படுத்தலாம், என்பது கருத்து. '' பரதார்ணவ '' த்தில் சதுரஹஸ்தம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

तर्जन्याद्याः त्रयः श्लिष्टाः कनिष्ठा प्रसृता यदि ।
अङ्गुष्ठानामिकामूले स भवेच्चतुरः करः ॥ (७१)

ஆள்காட்டிவிரல், நடுவிரல், மோதிரவிரல் இவற்றை நெருக்கமாகவைத்துக் கொண்டு சுண்டு விரலை வெளிப்புறமாகநீட்டி, கட்டைவிரலை ஆள்காட்டிவிரலின் அடிப்பாகத்தில் வைத்துக் கொண்டால் "சதுரஹஸ்தம்" என்று பெயர்.

இந்திரன்

शचीपते जितारातें वज्रपाणे पुरंदर ।
लक्ष्मीशोत्सवसेवार्थं आगच्छामरनायक ॥
समतालो नाटरागः स्वरः पञ्चमनायकः ।
नृत्तं विलासमित्युक्तं पुरन्दरमनः प्रियम् ॥ (श्री. प्र. ३४-१२३)

இந்திரனுக்குப் பிரியமான தாளம். "ஸமதாளம்" என்பது. இந்த தாளத்தைப் பற்றி "ஸங்கீத தர்ப்பணம்" கூறுகிறது.

समे लौ दौ विरामान्तौ मुखरीति निगद्यते । (१५५)

ஸங்கீத ரத்னகரம் :—

समौ लौ दौ विरामान्तौ ॥

என்று கூறுகிறது. 149-பக்கம்.

அதாவது இரண்டு லகு, இரண்டு த்ருதம். என்று அறிய வேண்டும்.

அடுத்து இந்திரனுக்குப் பிடித்த ராகம் "நாட" என்பது. இந்த ராகமும் பிரஸித்தமானதே: இந்த ராகம் ஒரு புருஷராகம். இதைப் பற்றி "ராகரத்னகரம்" என்ற நூல் கூறுகிறது :

अनेकनटधारी च युवा गौरोऽतिशोभनः ।
ताम्बूलहस्तो स्मेरास्यो नाटस्सुरसिकैर्मतः ॥ (१२९)

"நடநாராயண" என்ற ஆண் ராகத்திற்கும் "சுத்தஸாலங்கா" என்ற ராகிணிக்கும் பிறந்தது. "ராகரத்னகரம்" என்ற நூல் ராகங்களையெல்லாம் குடும்பமாக வர்ணித்து, பெண்ராகமென்றும், ஆண்ராகமென்றும், அவற்றின் பிள்ளைகள் என்றும் கூறிதேவதைகளாக வர்ணிக்கிறது. "ராக விபோதம்" என்ற நூல் நாடராகத்தைப் பற்றிக் கூறுகிறது.

खेटकक्रुपाणपाणिः प्रतर्जयन्वैरिणो रणेऽरुणदृक् ।

हरितालाभो हारी हयचारी धीरधीनंटः ॥ (२१९)

இந்த நாடராகத்திற்கும் சிற்சில பொருத்தங்கள் கூறலாம். இந்திரன் போகபுருஷன், ரஸிகன், அழகானவன், அதே போல் வீரனும் கூட, குதிரையில் செல்லுபவன், பொன்னிற முடையவன். ராகத்தின் இலக்கணமும் அதே போல் காணப்படுகிறது. ஸங்கீத ரீதியில் நாட ராகத்திற்கு இலக்கணம் சதுர்தண்டி பிரகாசிகை கூறுகிறது.

नाटः षड्जग्रहोपेतः अवरोहे गधवर्जितः ।

16-பக்கம் ராகவிபோதம் :—

नाटःशुचिः प्रदोषे च सांशन्यासग्रहः पूर्णः ॥ (११७)

இந்த நாடராகம் ஓர் சிக்கலான ராகம். சில நூல்கள் பிரதான ராகமென்றும், சில நூல்கள் ஜன்யராகமென்றும் கூறுகின்றன.

அடுத்து "விலாஸம்" என்ற நிருத்தம் இந்திரனுக்குப் பிடித்தமானது. இந்த விலாஸ நிருத்தத்திற்கு "லலிதம்" என்றும் பெயர் உண்டு என்பதை நாட்டியசாஸ்த்ரம் கூறுகிறது:

ललितं नामकनृत्यस्यान्यन्नाम विलासः ।

முத்ரை "பதாகம்". அதை ஸ்வஸ்திகமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

त्रिपताकौ प्रकोष्ठस्थौ यद्येतौ स्वस्तिकौ मतौ ॥ (३२)

என்று "பரதார்ணவம்" விளக்குகிறது. இரு கைகளிலும் திரிபதாகங்களை ஸ்வஸ்திகம் போல் அமைத்து மேலே நீட்டுதல். இந்த முத்திரை இந்திரனுக்கு உகந்தது என்று கூறப்பட்டுள்ளது.

## அக்நி தேவதை

स्वाहा स्वधापते वह्ने गार्हपत्यादिनामक ।

लक्ष्मीशोत्सवसेवार्थमागच्छ मखपूजित ॥

अटतालो गौलिरागः स्वरो वृषभसंज्ञिकः ।

नृत्तं तु सर्वतोभद्रं जातवेदप्रियं भवेत् ॥

அக்நி தேவனுக்கு "அட" தாளம் பிரியமென்று கூறப்பட்டுள்ளது. இந்த அட தாளத்தை அட்ட அத்து தாளமென்றும் கூறுகிறார்கள் சிலர். சங்கீத ரத்னாகரத்தில்

अड्डताली दो लधुद्वयं ।
अठतालेन संयुक्तं अठतालं प्रचक्षते ।
अठताले द्रुतौ द्विद्यक्षरकालावुभौ स्मृतौ ॥
पञ्च पञ्चाक्षरमितौ लधू द्वौ तदनन्तरम् ।
चतुर्दशाक्षरीकालः सातस्तेनाठतालकः ॥

என்று சதுர்தண்டி பிரகாசிகையும் கூறுகிறது. அடுத்து "கௌளீ" ராக ப்ரியர் என்று. இந்த கௌளீ என்பது "கௌரீ" என்றும். "கௌட" என்றும் நூல்களில் காணப்படுகிறது. இதற்கு ஒரு மரபு வடமொழியில் கூறுவர். "रलयोरभेदः" என்றும், "डलयोरभेदः" என்றும். ஆகையால் இந்த ராகத்தைப் பற்றி "ஸங்க்ரஹசூடா மணி" என்ற நூல் கூறுகிறது :

मायामालवगौलाच्च गौरी राग उदीरितः ।
सन्यासं सांशकं चैव सषड्जग्रहमुच्यते ।
आरोहे गधवर्जं चाप्यवरोहे समग्रकम् ॥

என்று 97-பக்கம். இந்த ராகம் மாயாமாளவ கௌளையின் ஜன்யம் என்றும், ஆரோஹணத்தில் காந்தார, தைவத வர்ஜம் என்றும், அவரோஹணத்தில் ஸம்பூர்ணமென்றும் காணப்படுகிறது. ஆனல் "கருணம்ருத ஸாகரத்"தில் அவரோஹணத்தில் மத்யம வர்ஜம் என்று காணப்படுகிறது. "ராகரத்னகரம்" என்ற நூல் இந்த ராகத்தைப் பெண் ராகமாக வர்ணிக்கிறது. மேலும், ஸ்ரீ ராகத்தின் ராகிணியாகவும் கூறுகிறது.

स्तनभरनमिताङ्गी कर्णताटङ्कलम्बी
मणिनिभदशनाली मस्तके मुक्तमाली ।
करतलधृतगुंजा लीलया स्मेरवक्त्रा
मृदुसितशुभवस्त्रा गौडिका रागिणी सा ॥ ३६ ॥

அடுத்து "ஸர்வதோபத்ரம்" என்ற நிருத்தம் அக்நி தேவனுக்கு உகந்தது. இப்பெயரில் நிருத்தம் நூல்களில் காணப்படவில்லை. ஆனல் "த்ரிபதாகம்" என்ற முத்ரை வலது கையிலும், இடது கையில் "கங்கூலம்" என்ற முத்திரையும் பிடித்தல் என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் முத்ரைகளை வைத்துப் பார்த்தால்

पताकोऽनामिका वक्रा यद्यसौ त्रिपताकः ।
केतकीकुसुमे दीपे वह्निज्वाला विजृम्भते ॥

என்று "பரதார்ணவம்" கூறுகிறது. பதாகமுத்ரையில் மோதிர விரல் வளைக்கப்பட்டால் "திரிபதாகம்" என்று பெயர். இந்த

முத்ரை தாழம்பூ, விளக்கு, அக்நிஜ்வாலை முதலியவைகளைக் குறிப்பிடவும் உபயோகப்படுகிறது. இந்த முத்ரை அக்னி தேவதைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இடக்கையில் "காங்கூல" ஹஸ்தம் என்று கூறப்பட்டுள்ளது.

पद्मकोशेऽनामिकाचेन्नत्रा कांगूलको भवेत् । (१९)

என்று பரதார்ணவம் கூறுகிறது. பத்மகோச ஹஸ்தத்தில் மோதிரவிரலை மடக்கினால் "காங்கூல" ஹஸ்தமாகும்.

யமதேவதை

लुलायवाहनारूढ कालसंहरिणीपते ।
लक्ष्मीशोत्सवसेवार्थमायाहि पितृभिस्सह ॥
तालस्तु मङ्गलःप्रोक्तः स्वरो गान्धार ईरितः ।
रागस्तु देशिकी नृत्तं सर्वतोभद्रनामकम् ॥

தென் திசைக்கு அதிபதியான தர்மராஜனை வழிபடும் பொழுது அவனுக்குப்பிடித்த ராக, தாள, நிருத்தங்களைக் கொண்டு துதிக்க வேண்டும். யமனுக்கு "மங்களம்" என்ற தாளம் பிரியமானது. இந்த தாளத்தை "ஜயமங்கள" தாளமென்றும் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்த ஜயமங்கள தாளத்தைப் பற்றி பரதார்ணவம் கூறுவது:

सकारश्च सकारश्च जयमङ्गलसंज्ञके ।

என்று (230 பக்கம்). ஜயமங்கள தாளத்தில் இரண்டு ஸ-கணங்கள் ஒன்றின் பின் ஒன்ருக வரும். அதாவது முதலில் இரண்டு லகுவும், ஒரு குருவும், மாத்திரைகள் எட்டு, இக் கருத்தையே "தர்ப்பணத்திலும்" காணலாம்,

स गणद्वितयं यत्र स तालो जयमङ्गलः ।

என்று (139-ம் பக்கம்) (1. 1. 5. 1. 1. 5) இவை அடையாளங்கள். அடுத்தபடி "தேசிகீ" என்ற ராகத்திற்குரியவன் யமன் என்று கூறுகிறது. "தேசிகீ" என்ற ராகம் "தேசாக்ஷீ" என்ற பெயரில் வழங்கப் படுவதாகத் தெரிகிறது. இப்பெயரிலேயே "ஸங்க்ரஹ சூடாமணி" இலக்கணகீதம் கூறியுள்ளது. "ஹரிகாம்போஜீ" ஜன்யம் "தேசாக்ஷி" என்ற ராகத்தை 13-வது மேளமாக வேங்கடமகி கூறுகிருர். தற்காலம் "சூலினி" என்ற ராகத்திற்கு மறு பெயராகக் கூறப்படுகிறது. "நிருத்தம்" "ஸர்வதோ பத்ரம்".

## நிருதி தேவதை

चतुर्भुजं प्राञ्जलिं च ध्यात्वैवं निऋतेर्दिशि ।

लक्ष्मीशोत्सवसेवार्थं निर्ऋते त्वत्र याहि भो ॥

जयताल: स्वर: षड्जे रागो देशाक्षिनामक: ।

नृत्तं कमलवत्वृत्तं निर्ऋते: प्रियदं भवेत् ॥

"நிர்ருதி" தேவதைக்கு "ஜய" என்ற தாளம் பிடித்தமானது. இத்தாளத்திற்கு இலக்கணம் "பரதார்ணவம்" கூறுகிறது.

जगणो लौ द्रुतौ पश्च जयताले प्रकीर्तित: ।

என்று (234-பக்கம்). இந்த தாளத்திற்கு முதலில் ஜகணமும் [அதாவது ஒரு லகு ஒரு குரு, ஒரு லகு] பிறகு இரண்டு லகுவும், இரண்டு த்ருதமும், கடைசியாக ஒரு ப்லுதமும் வரும். மாத்திரைகள் பத்து. 1. 5. 1. 1. 1. 0. 0. 5. (10)

மற்ெருரு ஜபதாளம்:-

जयश्च जगणो लश्च विन्दुयुग्मं प्लुतस्तत: । (२६०)

(260-பக்கம்). ஜய தாளத்தில் ஒரு ஜ-கணம். பிறகு ஒரு லகு, பிறகு இரண்டு த்ருதம், கடைசியில் ஒரு ப்லுதம் வரும், மாத்திரைகள். 9. 1. 5. 1. 1. 0.0.5.

சங்கீத தர்ப்பணத்திலும் - 'ஜய' தாளம் கூறப்பட்டுள்ளது.

जये पुन: । जो लधू द्वौ द्रुतौ पश्च । (१२७)

ராகம் "தேசாக்ஷி" முன்பே கூறப்பட்டது. "கமலம்" என்ற நிருத்தம் குறிக்கப்பட்டுள்ளது. இப் பெயரில் நிருத்தம் நூல்களில் காணப்படவில்லை. ஆனல் கவுத்தத்தில் "புஜங்க த்ராஸம்" என்ற நிருத்தம் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு இலக்கணம் "ந்ருத்த ரத்னுவளியில்"

भुजङ्गत्रासितां कृत्वा व्यावृत्त परिवृत्तकम् ।

एकं पादवशात् दोलमपरं कटकामुखम् ।

विदधीत यदा ज्ञेयं भुजङ्गत्रासितं तदा ॥

என்று 3. 167. இதே அபிப்ராயத்தை "நாட்டிய சாஸ்த்ர"த்திலும் "நிருத்தாத்யாயத்திலும்" காணலாம்.

## வருண தேவதை

श्रद्धावति पुरीनाथ पश्चिमाशापते विभो ।
लक्ष्मीशोत्ससेवार्थ मागच्छ जलजेश्वर ॥
भद्रतालो नाटराग: स्वरो धैवतमुच्यते ।
नृत्तं कमलमित्युक्तं वरुणस्य प्रियं भवेत् ॥

வருணதேவனுக்குப் பிரியமானது "பத்ர" தாளம். இத்தாளத்திற்கே "பத்ர பாண" என்ற பெயர் இருக்கலாம்எனத் தெரிகிறது. இத்தாளத்தைப் பற்றி "பரதார்ணவம்" கூறுகிறது.

भद्रबाणस्तु कथितो लध्वोर्मध्येद्रुतं भवेत् ।

என்று, (262-பக்கம்). இரண்டு லகுவிற்கு நடுவில் ஒரு த்ருதம் வரும். மாத்திரை: 2½ 1. 0. 1, வருணனுக்கு நாட ராகத்தில் பிரியம், இந்த ராகத்தைப் பற்றி முதலிலேயே குறிப்பிட்டுள்ளோம். "கமலம்" என்ற நிருத்தம் கூறப்பட்டது. நூல்களில் காணப்படவில்லை. ஆனால் கவுத்தத்தில் "குஞ்சிதம்" என்ற நிருத்தம் கூறப்பட்டுள்ளது, பரதார்ணவத்தில்.

अङ्गुल्य: पृष्ठसंस्पृष्टा भुव: पार्ष्णिरुदञ्चित: ।
आभुग्नो मध्यभागश्चेत् स: पाद: कुञ्चितो मत: ॥

கால் விரல்களின் மேற்புறம் பூமியில் படிந்திருக்கக் குதிகாலைத் தூக்கி உள்ளங்காலை உட்புறமாக வளைத்தால் "குஞ்சிதம்" என்பதாகும். இது "நாட்ய சாஸ்த்ர"த்திலும் கூறப்பட்டுள்ளது. "குஞ்சிதம்" என்றால் வளைதல் என்று பொருள். தாண்டவத்தில் குஞ்சித தாண்டவம் என்று ஒரு தாண்டவம் கூறப்படுகிறது.

## வாயு தேவதை

श्रीगन्धपत्तनाधीश सदागत्या समन्वित ।
लक्ष्मीशोत्सवसेवार्थमायाहि त्वं सदागते ॥
झम्पताल: समाख्यातो राग. श्रीरागसंज्ञक: ।
स्वर: षड्जो नृत्तमुक्तं पृष्ठकुट्टिमसंज्ञितम् ॥

வாயுதேவனுக்குப் பிரியமான தாளம் "ஜம்ப" தாளம், இந்த தாளம் பிரஸித்தமான தாளம். எல்லா நூல்களும் இந்த தாளத்தைப் பற்றிக் கூறியுள்ளன. "ஸ்ரீராகம்" வருணனுக்குப் பிரியமானது. இந்த ராகத்தை ஜனக ராகமாக வேங்கிடமகியும், கந்தர்வராஜரும் கூறியுள்ளார்கள். ஆனால் தற்காலம் ஜன்ய ராகமாகப்

பாடப்பட்டு வருகிறது. "ராக ரத்னுகரம்" என்ற நூல் இந்த ராகத்தை முதலாவதான புருஷராகமாகக் கூறுகிறது. இத்துடன் ஐந்து முக்ய ராகங்களும் கூறப்பட்டுள்ளன.

श्रीरागश्च वसन्तश्च पञ्चमो भैरवस्तथा ।
मेघरागोऽथ विज्ञेयो षष्ठो नटनारायणः ॥

என்று இந்த "ராகத்னுகரம்" வர்ணிக்கிறது.

दिव्यं वपुश्चन्द्रनिभं सुगौरं कर्णे दधानं शरदम्बुजानि ।
इक्षुं वहन्तं निजपाणिपद्मे श्रीरागराजं मुनयो वदन्ति ॥

நிருத்தம் "பிருஷ்ட குட்டிமம்" என்பது. இந்த நிருத்தத்தை "நாட்ய சாஸ்த்ரம்" "பிருஷ்ட குட்டம்" என்று கூறுவதாகத் தெரிகிறது.

भुजङ्गत्रासितै भ्रान्त्वा पादैरपि च मण्डलम् ।
पिष्टकुट्टं च विज्ञेयं चारीभिर्मण्डलं बुधैः ॥ (अ. ११-६५-६६)

இந்த நிருத்தத்தைப் பற்றி "சங்கீதரத்னுகர" மும் கூறுகிறது

सूची दक्षिणपादः स्याद्वामोऽपक्रान्तकस्ततः ।
सव्यवामौ च बहुशो भुजङ्ग त्रासितौ क्रमात् ।
यत्रान्ते मण्डलभ्रान्तिः पिष्टकुट्टं तदुच्यते ॥ (अ. ९-३५३)

முத்ரைகள், இடது கையில் அர்த்தபதாகமும், வலது கையில் "அராள" ஹஸ்தமும் ஆகும்.

## குபேர தேவதை

शङ्खादिनिधिप स्वामिन्नलकापुरनायक ।
लक्ष्मीशोत्सवसेवार्थमायाहि धनदेश्वर ॥
अनन्ततालो रागस्तु मोहनं वृषभः स्वरः ।
नृत्तं मण्डलनृत्तं स्यात् कुबेरं तैश्चतोषयेत् ॥

குபேரனுக்கு உகந்த தாளம் "அனந்த" தாளம், இப் பெயரில் ஸங்கீத நூல்களில் தாளம் காணப்படவில்லை. ராகம் "மோஹனம்". இந்த ராகம் மிகவும் ப்ரஸித்தமானது. மோஹனம் என்ற பெயருக்குத் தகுந்தபடி "ராகரத்னுகரம்" என்ற நூல் வர்ணிக்கிறது.

सुन्दरो लोहिताङ्गश्च तरुणो रूपवांस्तथा ।
स्त्रीजितो सदनाकारो मोहनस्स निगद्यते ॥ (१३२)

"நடநாராயண" என்ற ஆண் ராகத்திற்கும் "மதுமாதவீ" என்ற ராகிணிக்கும் பிறந்தது மோஹனம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த ராகத்தைப் பற்றி எல்லா சங்கீத நூல்களும் கூறுகின்றன.

அடுத்து நிருத்தம் "மண்டலம்" என்று கூறப்பட்டுள்ளது. இந்த மண்டல நிருத்தத்தைப்பற்றி "நிருத்த ரத்னுவளி" என்ற நூல் விளக்கமாகக் கூறுகிறது. பரதார்ணவம், நாட்டிய சாஸ்த்ரம், ந்ருத்யாத்யாயம், முதலான நூல்கள் "சக்ரமண்டலம்" என்ற பெயரில் கூறுகின்றன. இந்த ந்ருத்தம் பரமேச்வரனுக்கு மிகவும் பிரியமானது என்று கூறப்பட்டுள்ளது. குபேரன் பரமேச்வரனுக்கு மிகவும் பிரியமானவன், நெருங்கிய நண்பனும் கூட. ஆகையால் எப்பொழுதும் குபேரன் பரமேச்வரனின் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவன். பரமேச்வரனுக்குப் பிடித்தமான "மண்டல நிருத்தம்" குபேரனுக்கும் பிடித்தமானதாகக் கூறலாம். இதற்கு இலக்கணம். "நிருத்த ரத்னுவளி"யில் காணப்படுகிறது. 220-பக்.

मृदङ्गकरटाकांस्य तालकाहलवादकैः ।
वाद्यमानेषु वाद्येषु यतिप्रहरणादिषु
कांस्येन घटितान्यद्वा लोहेन फणिनः करैः ।
वामे वामेतरैः कोणान् विभ्राणास्तन्मयानपि ।
स्फुरत्किरिकिटीकारं वादयन्तो लयानुगम् ।
रुद्राक्षभरणाः श्लक्ष्णाः क्लृप्तभूतित्रिपुण्ड्रकाः ।
शिवैकतत्पराः भक्ता नराः नारीजनोऽथवा ॥
श्रेणीभूताः प्रमोदेन गायन्तश्चन्द्रशेखरम् ।
अङ्गैर्यथोचितैः पाटैः लास्याङ्गैः गतिसंयुतैः ।
अन्योऽन्याभिमुखीभूय द्विधाभूताः कदाचन ।
कदाचिन्मण्डलीभूताः नृत्येयुः बहुभङ्गिभिः ।
शिवोत्सवेषु कर्तव्यं नृत्तमेतच्छिवप्रियम् ।

இந்த நிருத்தம் பலபேர் சேர்ந்தும், பிரிந்தும் ஆடவேண்டியதாகும். குபேரனுக்கு இந்த நிருத்தத்தைக் கூறியபடியால் ஈச்வரனுக்கு ஒன்றும் கூறப்படவில்லை. ஸ்ரீ ப்ரச்னஸம்ஹிதையில் மேலும் சில திக்தேவதைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. அவற்றிற்கும் தாளங்களும், ராகங்களும், நிருத்தங்களும் காணப்படுகின்றன.

N. B. இக்கட்டுரைக்கு ஆதாரமான நூல்களின் விவரம்.

## ஆகமங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீப்ரச்னஸம்ஹிதை | கேந்த்ரீய ஸம்ஸ்க்ருதவித்யாபீடம், திருப்பதி. |
| 2. | விச்வாமித்ரஸம்ஹிதை | ,, |
| 3. | ஸோமசம்பு பத்ததி | பிரஞ்சு-இன்ஸ்டிட்யூட்-பாண்டிச்சேரி |
| 4. | ரௌரவாகமம் | ,, |
| 5. | ஸுப்ரபேதாகமம் | ,, |
| 6. | அஜிதாகமம் | ,, |
| 7. | மோஹ சூரோத்தரம் | ,, |
| 8. | ஸூதஸம்ஹிதை | ,, |
| 9. | நவஸந்தி கவுத்வம் | கையெழுத்துபிரதி (தமிழ்) பிடில் வித்வான் திருகோகர்ணம்-உலகநாதன்-அவர்கள். |

## சங்கீத நூல்கள்

| | | |
|---|---|---|
| 10. | சங்கீத ரத்னகரம் | I to IV. Vol. சார்ங்கதேவர் அடையாறு லைப்ரெரி |
| 11. | ஸங்க்ரஹ சூடாமணி | கோவிந்தர், அடையாறு லைப்ரெரி |
| 12. | ராகவிபோதம் | ஸோம நாதர் ,, |
| 13. | சங்கீத தர்ப்பணம் | சதுரதாமோதரர், ஸரஸ்வதிமகால், தஞ்சை |
| 14. | பரதார்ணவம் | நந்திகேச்வரர் ,, |
| 15. | கருணாம்ருதஸாகரம் | Vol. II. ஆப்ரகாம் பண்டிதர் |
| 16. | ராகரத்னகரம் | கந்தர்வராஜர் (ஓலைச்சுவடி) ஸ-ம-லை தஞ்சை |
| 17. | நாட்யசாஸ்த்ரம் | பரதமுனி I to IV. Vol. ஓரியண்டல் இன்ஸ்டியூட் பரோடா. |
| 18. | ஸங்கீதோபநிஷத் ஸாரோத்தார | ஸுதா கலச ,, |
| 19. | ராகதத்வ விபோத | ஸ்ரீனிவாஸ ,, |
| 20. | நிருத்தரத்னவளி | ஜாயஸேனபதி G. O. M. லைப்ரரி-சென்னை |

| | | |
|---|---|---|
| 21. | சதுர்தண்டிபிரகாசிகை | வேங்கடமகி, சங்கீதவித்வத்ஸபை |
| 22. | ஹஸ்தமுக்தாவளி | சுபங்கர Music Academy Journal Vol. 25, 26, 27. |
| 23. | நிருத்யாத்யாய | அசோகமல்ல, ஸம்வர்திகா ப்ரகாசன், அலஹாபாத் |
| 24. | ஸ்வரமேளகலாநிதி | ராமாமாத்ய, அண்ணமலைப் பல்கலைக்கழகம் அ-நகர் |
| 25. | அபிநயதர்ப்பணம் | நந்திகேச்வரர் K. L. முகோபாத்யாய, கல்கத்தா |
| 26. | பிருஹத்தேசி | மதங்கர், திருவனந்தபுரம் ஸம்ஸ்க்ருத கிரந்தாவளி, திருவனந்தபுரம் |
